# சங்க காலத்தில் மகளிர் தொழில்கள்

**முனைவர் ச. தனலெட்சுமி**
உதவிப்பேராசிரியை
தமிழ் உயராய்வு மையம், தமிழ்த்துறை
தி.ஸ்டாண்டர்டு ∴பயர் ஒர்க்ஸ் ராஜரத்தினம் மகளிர் கல்லூரி,
சிவகாசி

சங்க காலத்தில் மகளிர்க்குச் உயர்ந்த மதிப்பு இருந்தது என்பதனைச் சங்க இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்க அகப் பாடல்களிம் இடம்பெறும் குறிப்புக்களால் நிலத்தின் அடிப்படையில் மகளிர் நிலை பற்றி அறிய முடிகின்றது. புற வாழ்க்கையிலும், அக வாழ்க்கையிலும் மகளிர்நிலை போற்றத் தகுந்தநிலையில் இருந்ததனை இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. சங்ககால மகளிர் செய்துவந்த தொழில்கள் குறித்து இக்கட்டுரை விளக்குகிறது.

**மலர்:** 3

**இதழ்:** 1

**தொகுதி:** 1

**மாதம்:** ஜூலை

**வருடம்:** 2018

**ISSN:** 2454-3993

## சங்ககால மகளிர் தொழில்கள்

சங்ககால மகளிர் தம் வாழ்க்கைக்குத் தேவையானதைத் தம்மிடத்துள்ள பொருட்களை அவை தேவைப்படும் பிறர்க்குக் கொடுத்து தம்மிடத்திலில்லாத பொருட்களைப் பிறரிடத்திலிருந்து பெற்றும் வாழ்ந்துள்ளனர். குடும்ப மகளிரின் இந்தக் கொள்வினை – கொடுப்பினை பிற்காலத்தே வணிகவியல் வல்லுநர் பண்டமாற்று என்று குறிப்பிடும் முறைக்கும் அடித்தளமாய் அமைந்தது.

சங்ககாலத்தில் மக்கள் திணையடிப்படையில் பகுக்கப்பட்டு அவர்கள் திணை அமைந்துள்ள முறையில் தங்கள் தொழில்களை வகுத்துக்கொண்டனர். இதனால் அவர்கள் செய்தொழிலின் அடிப்படையில் அமைந்திருந்தனர். அதே அடிப்படையில் பெண்டிர் மேற்கொண்ட தொழில்களும் அமைந்திருந்தன.

## நிலத்தின் அடிப்படையில் மகளிர் தொழில்கள்

சுயமாகத் தொழில்கள் செய்து வருவாய் ஈட்டுவதன் மூலம் தமது தேவைகளைத் தாமே நிறைவேற்றிக்கொள்ள இயலும். தன்னம்பிக்கையும், சுயமதிப்பும் சொந்தமாக அண்டி வாழவேண்டிய நிலையில் பெண்கள் இன்றும் இருந்து வருகின்றனர். ஆனால் சங்கப் பாடல்கள் பெண்களும் ஆண்களுக்குச் சமமாகத் தொழில் செய்தனர் என்பதனை எடுத்துரைக்கின்றன.

## கொடிச்சியர்

குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த பெண்கள் கொடிச்சியர் எனப்பட்டனர். காவலின் பொருட்டுத் தினைப்புனத்தில் அமைக்கப்பட்ட பரண் மீதிருந்து தினையை உண்ணவரும் பறவைகளைக் கவண்வீசியும், தட்டை தட்டியும் ஓட்டிக் காத்தனர். மகளிர் தினைப்புனம் காக்கும் செய்தி கூறும் சங்க நூற்பகுதிகள் மிகுதியும் உள்ளன.

**"தழலை வாங்கியும் தட்டையும் ஓம்பியும்**
**..............................**
**குறமகள் காக்கும் ஏனல்"** **(அகம்:118, 11-13)**
**"படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே**
**உண்கிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே"** **(குறுந்தொகை:291:2)**

சங்க காலத்தில் பருவம் எய்திய பெண்கள் தினைப்புனம் காவலின் பொருட்டு வெளியே வருவர். தினைப்புனக் காவல் அவர்களது வாழ்வின் தொடக்கமாக அமைவதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

**ஆய்ச்சியர்**

முல்லை நிலப் பெண்டிர் ஆய்ச்சியர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கப்பட்டனர். ஆநிரை, ஆட்டுநிரை போன்றவற்றின் மூலம் கிடைக்கும் பால், மோர், தயிர், வெண்ணெய் போன்றவற்றை விலைக்கு விற்றல் தொழிலையும், பண்டமாற்றுத் தொழிலையும் அவர்கள் செய்து வந்தனர் என்பதை முல்லை நிலப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

ஆய்மகள் ஒருத்தி தான் தயிர் கொண்டு வந்த மிடா நிறையும்படி மகளிர் மருத நிலத்து மகளிர் தந்த வெண்ணெல்லைப் பெற்று மகிழ்ந்து சென்றதனைப் புறநானூறு,

**"................. ஆய் மகள்**
**தயிர்கொடு வந்த தசும்பு நிறைய**
**ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்**
**குளக்கீழ் விளைந்த கள்கொள் வெண்ணெல்**
**முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்"**

என்று குறிப்பிடுகிறது. இப்பாடல் அடிகளில் தயிர்க்கும் பண்டமாற்றாக வெண்ணெல்லைப் பெற்ற செய்தி இடம் பெற்றுள்ளது

**உழத்தியர்**

மருதநிலத்துப் பெண்டிர் உழத்தியர் என்ற பொதுச் சொல்லால் அழைக்கப்பட்டனர். வேளாண் தொழில் செய்யும் மாந்தர் உழவர் எனப்பட்டமை போல் வேளாண் தொழிலுக்குத் துணைபுரிந்த உழவரின் மனைவியர் உழத்தியர் எனப்பட்டனர். மருதநில மாந்தர்களின் செயற்பாடுகள் சங்க இலக்கியங்களில் பரவலாகச் சொல்லப்பட்டுள்ளன.

உழவர்கள் மாடுகள் பூட்டிய ஏர்களைக்கொண்டு நிலத்தை உழுவர். மகளிர் நெல்நாற்றுக்களை நடுமுன் தம் கால்களால் சோற்றை மிதிப்பர். பின் நெல் நாற்றுக்களை நடுவர். களைகளைப் பறிப்பர். அறுவடை செய்து தலையில் சுமந்துவந்து களத்தில் சேர்ப்பர். நெல்லடித்த பின்பு முறத்தைக்கொண்டு காற்றிலே, நெல்லைத் தூற்றி எடுப்பர். கொண்டை முடித்துத் தழையுடை அணிந்திருந்த கடைசியர் வயலில் களைகளாக முளைத்த நெய்தல், ஆம்பல் போன்றவற்றைக் களைந்த காட்சியைப் புறநானூறு பதிவாக்கியுள்ளது.

**"கொண்டைக் கூழைத் தண்டழைக் கடைசியர்**
**சிறுமாண் நெய்தல் ஆம்பலொடு கட்கும்**
**மலங்குமிளிர் செறு" (புறம்: 61:1-3)**
என்று குறிப்பிடுகின்றது.

**பரதவ மகளிர்**

நெய்தல் நிலத்தில் வாழும் ஆடவரைப் பரதவர், நுளையர் என்றும், மகளிரைப் பரத்தையர், நுளைச்சியர் என்றும் குறிப்பிடுவர். ஆடவற், கடலிற் சென்று மீன்பிடிக்கும் தொழிலைச் செய்தனர். அவ்வாறு பிடித்துக்கொணர்ந்த மீன்களை மகளிற் சேரிகளிற் கொண்டுசென்று விற்றல், எஞ்சியவற்றை உலரவைத்தல் போன்ற பணிகளைச் செய்தனர்.

**தொழில் அடிப்படையில் மகளிர்**

இது மட்டுமல்லாமல் செய்தொழில் அடிப்படையிலும் பெண்கள் அழைக்கப்பட்டனர் என்பது புலனாகின்றது. அரியல் மகளிர் (கள் விற்பவள்) பண்ணியம் முதலிய பல்பொருள் விற்கும் மகளிர், பூவிலை மடந்தையர், (பூ விற்கும் மகளிர்) பருத்திப் பெண்டிர், ஏவல் மகளிர், புலைத்தி, கொண்டிமகளிர் போன்றோரைப் பற்றிய குறிப்புக்களும் காணக்கிடக்கின்றன.

**பூவிலை மடந்தையர்**

மகளிர் தம் ஒப்பனைப் பொருட்களுள். மலர்கள் என்றும் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. பண்டைக்காலத்தில் அந்தந்தப் பருவத்தில் மலர்ந்த புத்தம்புதுப் பூக்களைக் கொய்து இளமகளிர் வட்டிகளில் ஏந்தித் தெருக்கள் தோறும் திரிந்து விலைகூறி விற்றனர். இச்செய்தியை நற்றிணை, அகநானூறு, மதுரைக்காஞ்சி, புறநானூறு போன்ற இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

“பூவிற்கும் மகளிர், காலச்சூழ்நிலையறிந்து இல்லங்களுக்குச் சென்று மலர் விற்பர் என்னும் கருத்தினைப் புறநானூறு,

**“குறும்பர்க்கு எறியும் ஏவல் தண்ணுமை**
**நாணுடை மாக்கட்கு இரங்கு மாயின்**
**எம்மினும் பேரெழில் இழந்து வினையெனப்**
**பிறர்மனை புகுவார் கொல்லோ**
**அளியள் தானே பூவிலைப் பெண்டே” என்று கூறுகின்றது.**

**பருத்திப் பெண்டிர்**

மகளிர், தாவர இனஞ்சார்ந்த பருத்தியினின்றும், விலங்கின் வகையைச் சார்ந்த பட்டுப்பூச்சினின்றும் நூலைப்பெற்று ஆடைகளை நெய்தனர். இதில் குறிப்பாகப் பருத்திநூல் நெசவு சிறப்பு பெற்றிருந்தது. பருத்தியைப் பயிர் செய்து, விளைவித்து, வில்லில் அடித்துக் கொட்டையும் கோதும் நீக்கித் தூ ய்மைசெய்து பயன்படுத்தினர்.

மகளிர் நெசவில் ஆடவர்க்குப் பெரிதும் உதவி செய்தனர். இரவுப்பொழுதில் இவ்வேலையைச் செய்தனர் என்பதைச் “சிறுதீ விளக்கத்து” (புறம்-326:5) என வரும் புறநானூற்றுத் தொடரால் அறியலாம்.

**ஏவல் மகளிர்**

அரண்மனையில் மகளிருட் சிலர் ஏவற் பெண்டிராக இருந்து பிறர்க்குப் பணிகள் செய்து வந்தமையினைச் சங்கஇலக்கியங்கள் சுட்டுகின்றன. தொல்காப்பியரும் ஏவற்பணி செய்வோரைப் பற்றிச் சுட்டுகின்றார். ஏவல் மகளிர் மன்னனுக்குப் பொற்காலத்தில் மதுவை ஊட்டுவர், பாட்டாலும், கூந்தலாலும் மன்னர் அவையை மகிழ்ச்சியுறச் செய்யும் இன்னகை மகளிர் இருந்ததைப் பத்துப்பாட்டும், பதிற்றுப்பத்தும் குறிப்பிடுகின்றன.

**புலைத்தி**

சங்ககாலச் சமுதாயத்தில் ஆடை வெளுப்போள் புலைத்தி என்ற சொல்லால் அழைக்கப்பட்டாள். அவர்களது செயல்களைப்பற்றி,

**"களர்ப்படு கூவல் தோண்டி நாளும்**
**புலைத்தி கழிஇய தூவெள் அறுவை"**
என்று புறநானூறு குறிப்பிடுகின்றது.

**பொதுத் தொழில்கள்**

நிலப்பாகுபாட்டிற்கேற்ப பெண்களின் தொழிலும் பலவாக அமைந்திருந்தன. இவைதவிர பொதுநிலையில் சில தொழில்களும் மகளிர்க்குரியனவாக இருந்தன.

**அரியல் மகளிர்**

அன்று பெருவழக்காக இருந்த கள்ளருந்தும் பழக்கத்திற்குத் தேவையான கள்ளினைத் தயாரிப்பதையும், பல்லிடங்களுக்கு எடுத்தச்சென்று விற்பதையும் பெண் மேற்கொண்டதைச் சங்கப்பாக்கள் தெரிவிக்கின்றன. (அகம் 157:1-4) (பெரும் 339). இவர் அரியற் பெண்டிர் எனவும் கள்ளம் மகளிர் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்தம் தொழில் திறமைக்காகப் பெண் யானையைப் பரிசிலாகப் பெற்றதும் (குறுந் 298:5) நோக்கிற்பாலாகாது.

ஆடவர் மகிழ்ந்து அருந்த மகளிர் அவர்க்குக் கள் வழங்கும் காட்சி பெருமையாக உணர்த்தப்பட்டிருப்பது. (புறம். 367:6-7, 18) என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

**புலைத்தி - துணைத்தொழில்**

பிறரின் ஆடைகளைத் தூய்மைசெய்யும் புலத்தி துணைத் தொழிலாகப் பனையோலை கொண்டு பெட்டிகளைச் செய்து விற்றலும் காணப்படுகிறது (கலி.117: 6-8). கைத்தொழிலுக்கும், மகளிருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைக் காட்டுகிறது.

**அகவல் மகளிர் வெறியாள்**

அகவல் மகளிர், வெறியாட்டை நிகழ்த்தும் வெறியாள் (குறுந்.366) எனப்பிறரும் அறியப்படுகின்றனர். இவர்கள் ஊதியமாக எவற்றை எப்படிப் பெற்றனர் என்பதற்கான விளக்கங்கள் சங்கப் பாக்களில் தென்படவில்லை.

**குற்றவேல் மகளிர்**

பெருஞ்செல்வந்தர் இல்லங்களிலும் (நற் 331:2) அரண்மனைகளிலும் (நெடு 151) குற்றவேல் செய்யும் மகளிரும் காணப்படுகின்றனர். பாசறைகளில் குற்றேவல் பணியாளராகப் பெண்டிர் பணியாற்றியுள்ளனர்.

**புலம் பெயர்தல்**

பொதுநிலையில் மகளிரைத் தொழில் நிலையில் அணுகும்பொழுது பொருளாதாரத்தில் பின்தங்கியோர், பொருள் தேடலின் பொருட்டு நிலம் பெயர்தல் தடைசெய்யப்படவில்லை எனத் தெரிகிறது.

**ஆயர்மகள்**

சங்கச் சமூகப் பெண்கள் பொருளுடைமையாளராக எம் கேள்வன் தருமோ (கலி 106: 44-45) என வினவுவதும், "பெண்டிரும் தம் பதம் கொடுக்கும்" (புறம் 151-5) எனும் குறிப்புகள் காட்டுகின்றன. காலைப் பொழுதிலே தயிர் கடைந்து அதனை மோராக்கி விற்று, அதனின்றும் வரும் வருவாயில் சுற்றத்துடன் பகிர்ந்துண்பதும், நெய்யினால் கிடைக்கும் பொருளில் எருமைகளை வாங்கித் தன் இல்லத்தினை மேலும் மேலும் வளம் பெறச் செய்யும் ஆய் மகளிரை,

**"ஆம்பி வான்முகை அன்ன கூம்பு முகிழ்**
**உறையமை தீந்தயிர் கலக்கி நுரை தெரிந்து**
**புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீ,**

**நாள் மோர் மாறும் நன்மா மேனிச்**
**சிறுகுழைதுயல் வரும் காதில் பணைத்தோள்**
**குறு நெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்**
**ஆளைவிலை உணவில் கிளையுடன் அருத்தி**
**நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்**
**எருமை நல்லாள் கருநாகு பெறூஉம்" (பெரும் 157-165)**

எனக் காட்டியிருப்பது எண்ணத்தக்கது. இப்பொருளாதாரச் சுதந்திரம் பிறநில மகளிருக்கு இருந்ததா என்ற வினா இங்கெழுகின்றது. குறிஞ்சி, நெய்தல், முல்லை நிலப் பொருட்களை அந்நிலத்தவர் கொணர, தன் இல்லிலிருந்தே பண்டமாற்றாக அவற்றைப் பெற்றுக்கொள்ளுகிறாள். (புறம் 33:1-7) (ஐங் 47:1-3) இவற்றை நோக்க நிலத்திற்குத் தக மகளிர்க்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளில் நெகிழ்ச்சியும், அழுத்தமும் இருந்தனவோ என்ற எண்ணம் தோன்றுகிறது. மேற்படி நிலத்தைவிட மருதநில வாழ்வு பொருளாதாரத்தில் உயர்நிலை உடையதாக அமைந்திருந்ததும் கருதற்பாலது.

பொருளாதார நிலையில் பெண்ணினத்திடையே வேறுபாடு அமைதலும், தொழிலடிப்படையில் உயர்வு தாழ்வு கற்பிப்பதும் (பரத்தை, புலைத்தி-தாழ்வு நிலை) காணப்படுகிறது. சமூகத்தில் பொருளாதார நிலையில் உயர்வு பெற்றிருந்த அரசமகளிர் பொதுநிலையில் பிற பெண்டிர் ஒப்பவே அமைகின்றனர். புறம் 166:13-18, புறம்.144) எனினும் அரசமகளிர் எனும் தகுதி காரணமாகச் சில தனித்த மதிப்பிழத்தல்களையும் அடைந்துள்ளனர்.

கணவனாகிய அரசன் போரில் தோல்வியடைந்தால் மாற்றானால் துன்புறுத்தப்பட்டனர் (பதி 8-ஆம் பதிகம், ப-4-10) இப்பெண்டிரது கூந்தலைக் கொய்து, அதில் கயிறு திரித்து, அதனால் யானைகளைக் கட்டியிழுத்து (பதி 5-ஆம் பதிப்பகம் 15-17) அவமதிக்கப்பட்டனர்.

கொண்டி மகளிராகச் சிறைபிடிக்கப்பட்டு வெற்றி பெற்றோர் நாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அங்கு ஊர்ப்பொதுமன்றத்துக் கோயிலில் விளக்கேற்றுதல் (பட் 246-249) முதலான செயல்கள் அரச மகளிரை உடன்கட்டை ஏறத் தூண்டியிருக்கலாம். அரச மகளிராயினும், சமூகத்தின் பொதுவிதிகள் அவருக்கும் ஏற்புடையதே என்பதை உடன்கட்டை ஏறிய பெருங்கோப் பெண்டின் பாடல் (புறம் 246) வலியுறுத்தும்

## தொகுப்புரை

சங்ககாலத்தில் ஒவ்வொரு நிலப்பகுதியிலும் வாழ்ந்த ஆடவரும், மகளிரும் தத்தம், தொழில் செய்தனர் ஆடவர்க்குத் துணையாகவும், தொழில் செய்ததையும் அறிய முடிகின்றது. மேலும், அவரவர் வேறுபாடு கருதாது பெண்கள் செய்தொழில்களைச் செய்து வந்தனர் என்பதும், பிற சமுதாய நிலைகளிலும் ஆடவரோடு ஒப்ப மதிக்கும் நிலையைப் பெற்றிருந்தனர் என்பதையும் நன்குணர முடிகின்றது. சங்ககால மகளிர் தம் காலிலே நிற்க வேண்டுமெனும் எண்ணத்தினராய் தொழில் செய்து வந்தனர். தொழில்கள் இல்லறத்திலிருந்து பொருளீட்டி இன்பம் துய்ப்பதற்கு ஏதுவாக இருந்தன. சங்க காலத்தில் மக்கள் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நான்கு நிலங்களில் வாழ்ந்து வந்த காரணத்தினால் அந்நிலத்துக்கேற்றவாறு தொழில்களும் அமைந்திருந்தன.